[19th August 1960

*Harijan Welfare House-building Schemes*

*296 Q.—SRI M. A. B. ARUMUGHASAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-60 ஆண்டில் ஹரிஜன நல வீடு கட்டும் திட்டத்தின் கீழ் மதுரை ஜில்லாவில் திண்டுக்கல் ரெவின்யூ டிவிஷனில் எந்தெந்த ஊரில் எத்தனை வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டது?

(ஆ) அவைகளில் எந்தெந்த ஊர்களில் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன?

(இ) அவைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

THE HON. SRI P. KAKKAN : (அ) & (இ) A statement[a] is placed on the table of the Assembly.

(ஆ) Information is being collected and will be placed on the table of the House as soon as possible.

SRI M. A. B. ARUMUGHASAMY : ஸார், ஸ்டேட்மெண்டில் கொடுத்துள்ளபடி கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும், ஹரிஜனங்களுக்காக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டபடி, கட்டப்பட்ட வீடுகள்தானா? அல்லது ஒதுக்கப்பட்ட வீடுகளில் ஏதாவது ஒரு தொகுதியில் கட்டுவதற்கு தாமதம் ஏற்பட்டதால் மற்றொரு தொகுதிக்கு மாற்றி கட்டப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கட்டப்பட்ட வீடுகளுக்குக் கொடுக்கப்பட்ட பணம் ஹரிஜன நல இலாகாவிலிருந்துதான் கொடுக்கப்பட்டது. இதரத் தொகுதிகளுக்கு மாற்றப்பட்டதைக் குறித்துத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

SRI A. GOVINDASAMY : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையைப் பார்க்கும்போது மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் அதிகமாக மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் பகுதியில்—150 வீடுகள் — கட்டப்பட்டிருக்கின்றன. அந்த மாவட்டத்திற்கு மட்டும் விசேஷ சலுகை காட்டக் காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN : மதுரை ஜில்லாவுக்கு மட்டும் தனிச் சலுகை என்பதல்ல. ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்தந்த அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடுகிறோம்.

*Boat Building Industry*

*297. Q.—SRI N. MARUDACHALAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) படகு கட்டும் தொழிற்சாலை எங்கே உள்ளது?

(ஆ) இல்லையெனில், ஆரம்பிக்க உத்தேசம் உண்டா? எப்போது (?) எங்கே?

---

(a) Printed as Appendix II on page 107 infra.